IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 68 /2012

Deposition of witness for DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Caste | : - |
| Father's Name | : கங்காதரன் | Calling | : - |
| Village | : கொக்கேரி கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : காட்பாடி | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 3 day of October, 2019.

Cross Examination Continuation (வாதி தரப்பு குறுக்கு விசாரணை)

பி.வா.சா.ஆ5 பாகபத்திர அக்குவிடுதலைப்பத்திரத்தின் அசல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கல்வி கடன் பெற்றமைக்காக வங்கியில் வைத்துள்ளேன். அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ5 ஆவணத்தின் 5ம் பக்கத்தில் பூர்வீகபாத்தியப்பட்ட என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். பூர்வீகபாத்தியப்பட்ட சொத்து என்றும் டிகிரி பாத்தியப்பட்டது என்றும் வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 605/1990 என்ற வழக்கிலும் ஏ.எஸ்.51/2002 என்ற வழக்கிலும் ஏற்பட்ட தீர்ப்பில் கங்காதரனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கங்காதரனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்படாத நிலையில் அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ5 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் துளசிலிங்கம் த/பெ.வெங்கடேசன் மற்றும் இன்பநாதன் த/பெ.மாசிலாமணி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். இராணிப்பேட்டை வழக்கறிஞர் நேதாஜி என்ற வழக்கறிஞரின் உதவியுடன் பி.வா.சா.ஆ5 ஆவணத்தை போலியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல (வழக்கறிஞரின் பெயரை குறித்து கேள்வி கேட்க ஆட்சேபிக்கப்பட்டது) வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பி.வா.சா.ஆ5-ஐ தயார் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ5-ஐ மையமாக வைத்து காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் மோசடியாக பட்டா பெற்றேன் என்றால் சரியல்ல. பட்டா எண்.906, 27.01.2010 அது பி.வா.சா.ஆ7 ஆகும். பி.வா.சா.ஆ7 ஆவணத்தை வைத்து முரளி என்பவரது பெயரில் மின் இணைப்பை மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா சொத்து ஆஞ்சநேயருக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் தப்பனார், தாயார் அனுபவத்தில் தாவா சொத்து 2011-வரை இருந்தது என்றால் சரியல்ல. 10.10.2011-ல் வாதியின் தகப்பனார், தயார் இருவரும் தன்னுடைய மகளுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாதியின் பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2006 வரை தாவா சொத்தில் இருந்துகொள்ளலாம் என அனுமதி கொடுத்ததின்பேரில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 7 செண்டின் சர்வே எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வாதிக்கு தாவா சொத்தில் பூரண உரிமை உண்டு என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருடைய நிலத்திற்கு உள்ளே இருக்கிறது என்றால் ஏற்கனவே அந்த விவரத்தை கூறிவிட்டேன். தாவா சொத்தில் நான் டீ கடை வைத்து நடத்திவரவில்லை என்றால் சரியல்ல. கூரைவீட்டை இடித்தது முரளியும், நானும் தாவா சொத்தை இடித்தோம் எங்களுக்கு சொந்தமானது என்பதால் இடித்தோம். தாவா சொத்தில் வீடு கட்டியது எனது தம்பி முரளியாவார். எனது தம்பி இராணுவத்தில் பணிபுரிகிறார். அவர் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தற்பொழுது தெரியாது. கைபேசி எண் எனக்கு தெரியாது. அனுமதி வாங்கி வீடுகட்டவில்லை என்றால் அது தவறு. அனுமதி பெற்று இருந்தால் அதை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் அவர்களுக்கு தொந்தரவு கொடுத்ததால் தான் எங்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இராணிப்பேட்டை காவல்நிலையத்தில் முரளியையயம், என்னையும் அழைத்து விசாரித்து கையெழுத்து வாங்கிகொண்டு அறிவுறை கூறி என்னை அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. பரிமளா என்பரை இரண்டு காலையும், இரண்டு கையையும் வெட்டி அதே

இடத்தில் புதைத்துவிடுவோம் என்கறு கூறியதால் எங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியினுடைய தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மாட்டுகொட்டகை அமைத்தள்ளோம் என்றால் சரியல்ல. எனவே 23.09.2019 அன்று நோட்டீஸ் ஒன்று அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. அதை நான் வாங்கி கொண்டேன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கோ, தாத்தாவிற்கோ தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும், அல்லது தாவா சொத்து நாங்கள் கிரையம் பெற்றதற்கோ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணன், வெங்கடேசன் ஆகியோரிடமிருந்து ஆஞ்சநேயன் என்பவர் 27.11.1987 தேதியில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல அது போலியான கிரையம் ஆகும். தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதியினுடைய சகோதரரைப் பற்றி எனக்கு தெரியாது. வாதியினுடைய சகோதரரை நானும், எனது தம்பியும் சேர்ந்து அடித்தோம் என்றால் சரியல்ல தவறான தகவல் ( வாதுரையில் இதுபற்றி குறிப்பிடப்படாததால் இந்த வினா கேட்பதற்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது ஆட்சேபணையோடு இது பதிவு செய்யப்பட்டது). வாதியினுடைய தகப்பனார் ரவி(எ) சங்கர் நல்லாசிரியர் என்றும், அவருக்கு மது ஊற்றி கொடுத்து நீதிமன்றத்திற்கு வரவிடாமல் செய்துவிட்டார்கள் என்றால் அது தவறு (வாதுரையில் இதுபற்றி குறிப்பிடப்படாததால் இந்த வினா கேட்பதற்கு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது ஆட்சேபணையோடு இது பதிவு செய்யப்பட்டது). தாவா சொத்து வாதிக்கு பூரண உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து கொட்டகை அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தை காலிசெய்து வாதியிடம் சுவாதீனம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கை ஆட்சேபிகப்பதற்கும் எதிர் வாதம் செய்வதற்கும் அறுகதையில்லை என்றால் சரியல்ல. வாதயின் சர்வே எண். 42/3 என்றும், 42/1, 42/2, 42/3பி ஆகிய சொத்துக்கள் வாதிக்கு

சொந்தமான சொத்துக்கள் என்றால் தவறு. தவறான ஆவணங்களை தயார் செய்து பட்டா, சிட்டா மற்றும் மின் இணைப்பு வாங்கியதும் செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்படவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.